<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>

அ.வ.எண். 18/2019

பெயர் – தவசிலிங்கம்(வா.சா.2)

நாள் – 01.12.2025

**<u>2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) தாவா சொத்திற்கு வடக்கே உள்ள சொத்துகள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது வயது 55 ஆகும். வழக்கு சொத்துக்கள் செல்லதுரை ரெட்டியார், நடராஜன் ரெட்டியார், பெருமாள் ரெட்டியார் ஆகியோர்களுக்கு பாத்தியபட்டதால் தான் பென்சிங் போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல, இடங்களை சேர்த்து வளைத்து போட்டுள்ளார்கள். மேற்படி நபர்கள் தங்களுக்கு உட்பட்ட இடங்களை தனிதனியாக பென்சிங் போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல, மொத்தமாக பென்சிங் போட்டுள்ளார்கள்.

2) பிரதிவாதிகளுக்கு பூர்வீக ஊர் ஊஞ்சம்பட்டி என்றால் சரியல்ல, இராமசந்திராபுரம் ஆகும். 3ம் பிரதிவாதிக்கு சொத்திற்கு வடக்கே ரோட்டிற்கு மேற்காக நான் பெட்டி கடை வைத்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகள் பென்சிங் போடுவதால் எனது கடையை காலி செய்ய சொன்னதால் தான் நான் காலி செய்தேன் என்றால் சரியல்ல, வியாபாரம் சரியில்லாமல் போனதால் நான் காலி செய்தேன். அவ்வாறு பிரதிவாதிகள் என்னை காலி செய்ய கூறியதால் தான் இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) என்னிடம் காண்பிக்கப்படும் நீ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் எனது கடைக்கு கிழக்கே செல்லத்துரை ரெட்டியாரின் இடம் உள்ளது என்றால் சரிதான். செல்லத்துரை ரெட்டியார் இடத்திற்கு மேற்கே கிணறு உள்ளதா என்றால் சரியல்ல, காலியிடம் தான் உள்ளது. செல்லத்துரை ரெட்டியாரின் இடத்திற்கு மேற்கே சின்டெக்ஸ் டாங், மோட்டார் போடும் சுட்விச் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். மேற்படி செல்லத்துரை ரெட்டியாரின் சொத்திற்கு மேற்கே கிணறு இல்லை என்றும், எனது பெட்டிகடை, சின்டெக்ஸ் ஆகியவை உள்ளது என்றும், வாதியின் தபசில் சொத்திற்கு நடந்து தான் செல்ல இயலுமா என்றால் சரிதான்.

4) மேற்படி மோட்டார் போடு, பெட்டிகடை, சின்டெக்ஸ் ஆகியவை தற்போது உபயோகத்தில் இல்லை என்றால் பெட்டிகடை தற்போது பயன்பாட்டில்

இல்லை, மோட்டார் போடு மற்றும் சின்டெக்ஸ் டாங் ஆகியவை தற்போது பயன்பாட்டில் உள்ளது. கிணற்றிற்கு மேற்கே காலியிடம் உள்ளதா என்றால் இல்லை, பஞ்சாயத்து கட்டிடங்கள் உள்ளன. பஞ்சாயத்து கட்டிடத்திற்கு தெற்கே புஞ்சை நிலம் உள்ளதா என்றால் சரிதான்.

5) தபசில் சொத்திற்கு தெற்கே புஞ்சை நிலம் உள்ளதா என்றால் ஓடை உள்ளது, அதற்கு பிறகு புஞ்சை நிலம் உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கேயும், புஞ்சைக்கு வடக்கேயும் தார் ரோடு செல்கிறதா என்றால் சரிதான். அரசு கட்டிடங்கள் எல்லாம் 10 வருடத்திற்கு முன்பாக கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரசு கட்டிடங்களான குளியலறை, வாட்டர் டாங், கழிப்பறை, பஞ்சாயத்து அலுவலகம் ஆகியவை பள்ளிகூடத்திற்கு கிழக்கிலும், தாவா சொத்திற்கு மேற்கிலும் உள்ளதா என்றால் சரிதான்.

6) பிரதிவாதிகள் சொத்திற்கு வடக்கே கிழமேல் தார் சாலை வழியாக நடந்து வரும் போது தாவா சொத்திற்கு தெற்கே உள்ள கிழமேல் தார் சாலையை கடந்து தான் பிரதான சாலைக்கு வர வேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கே உள்ள சொத்தில் அரசு கட்டிடங்கள் கட்டும் போது வாதிகள் அதை தடுத்தார்களா என்றால் தடுக்கவில்லை. தாவா சொத்திற்கு வடக்கே உள்ள பிரதிவாதிகள் சொத்தில் வாதிக்கோ, மற்ற யாருக்கோ எந்தவித பாதையோ, வழியோ இல்லை என்றும், பிரதிவாதிகள் பிழைப்பு தேடி வெளியூர் சென்றுவிட்ட காரணத்தினால் பிரதிவாதிகள் சொத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

7) வாதிகள் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தற்போதும் வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்று கூறும் பட்சத்தில் அவர்களுக்கு தாவா சொத்தை அடைவதற்கு வேறு வழிகள் இருக்கிறது என்றும், பிரதிவாதிகள் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தினால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.